**S.C.No. 137 / 2025**

**PW19 – Thiru. Manimaran**

**23.02.2026**

சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

**(சாட்சி காணொளியில் ஆஜர்)**

**நேரம் 13.00 மணி**

நான் Airtel Service Provider ல் Nodal Officer ஆக எவ்வளவு காலம் பணிபுரிந்து வருகிறேன் என்றா'ல 03-06-2025 முதல் பணியாற்றி வருகிறேன். 17-02-2025 அன்று காவல் துணை கண்காணிப்பாளரிடமிருந்து CDR & CAF கான வேண்டுகோள் கடிதம் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் 19-06-2025 அன்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நீண்ட காலம் காலதாமதாக வழங்கப்பட்தற்கான காரணத்தை 63(4) BSA சான்றிதழில் குறிப்பிட்டு கூறியுள்ளோமா என்றால் இல்லை. இந்த வழக்கின் ஆவணங்களை எடுப்பதற்காக எங்களின் தனிப்பட்ட லேப்டாப்பை பயன்படுத்தி எடுத்தேனா என்றால் அலுவலகத்திலிருந்த Desktop தான் எடுத்தோம். சான்றிதழில் லேப்டாப்-ஆ அல்லது கணினியிலிருந்து எடுத்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் Computer (or) Storage Media ல் இருந்து எடுக்கப்பட்டதாக கூறியுள்ளேன். அதனுடைய விவரங்களை அதன் கீழே கொடுத்துள்ளேன். நான் காவல் துறைக்கு கொடுத்திருக்கும் CAF நகலில் அதனுடைய பயன்பாட்டாளரின் பெயர் ராஜா த/பெ. செல்வராஜ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவருடைய விலாசம் 6/9, சென்னாகாரணி கிராமம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த CAF Generate பண்ணிய தேதி மற்றும் 06-03-2021, நேரம் 19:32 வினாடிகள் 48 என்றால் சரிதான். அந்த CAF ல் அவருடைய Tarriff Plan க்கு கீழ் மேற்படி நபருக்கு ஏற்கனவே Jio Service provider மூலமாக வேறு ஒரு இணைப்பும் அவருக்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனடிப்படையில் நான்

அவருக்கு சிம்மிற்கு ஒரு அலைபேசி எண் வழங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். International Mobile Subscriber Identity No. & Sim No. கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இந்த ஆவணத்தை வழங்கிய தேதியில் CAF ல் புகைப்படம் உள்ளது என்றால் சரிதான். அது வழங்கப்பட்டவருக்கான புகைப்படம் என்றால் சரிதான். அந்த CAF ல் இணைப்பை கொடுப்பதற்கு ஆதாரமாக அவரிடமிருந்து பெறப்பட்ட ஆதார் அட்டையின் நகலை போலீசாரிடம் ஒப்படைத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த ஆதார் அட்டையில் ராஜா D என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் பிறந்த வருடம் 1996 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகைப்படமும் CAF ல் இருக்கும் புகைப்படமும் இருவேறாக உள்ளதா என்றால் ஆதார் உள்ளதில் உள்ள புகைப்படம் மற்றும் ஆதார் வாங்குமபோது உள்ள புகைப்படம், CAF ல் புகைப்படம், SIM வாங்கும்போது உள்ள புகைப்படமாகும்.CAF ல் புகைப்படத்தை தவிர என்னுடைய ஏஜெண்ட் மூலமாக Hardcopy ல் வரக்கூடிய புகைப்படத்தை ஸ்கேன் செய்வோமா என்றால் மேற்படி CAF ஐ Digital Process ல் எடுத்துள்ளார்கள். ஆதார் ஆவணத்தின் 2 ஆவது பக்கத்தில் எதிரியின் இணைப்பு வழங்கப்பட்டவரின் தகப்பனார் பெயர் செல்வராஜ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் துறை மூலமாக 17-02-2025 அன்று வந்த கடிதத்தில் விண்ணப்பதாரரின் தந்தை பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. இந்த வழக்கில் CDR 01-01-2025 முதல் 10-01-2025 வரை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டு 10 பக்கத்தில் தேதி 06-01-2025 ல் CDR ல் CAF ல் உள்ள IMSI No. குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை பயன்படுத்தப்பட்ட அலைபேசியின் IMEI No. குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த IMEI No. அனைத்தும் ஒன்று தான் என்றால் சரிதான். அந்த 10 பக்கதகில் உள்ள அழைப்புகளுக்கான IMEI No. அனைத்தும் ஒன்றுதான் என்றால் சரிதான். அதை தவிர்த்து IMEI No. 3561 2473 0358 684 என்ற எண் பதிவாகியுள்ளதா என்றால் இல்லை. 3561 2473 0358 680 என்ற IMEI எண் தான் பதிவாகியுள்ளது. அதே வரிசையில் கடைசி நான்கு இலக்க எண்களாக 8692 என்ற IMEI எண்

பதிவாகியுள்ளதா என்றால் இல்லை. எங்களுடைய Service Provider ல் 06–01–2025 அன்று முழுமையான பயன்படுத்தப்பட்டுள்ளதா அல்லது வேறு Service Provider ல் டவர் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றால் எங்களுடைய வேறு வேறு டவர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. பக்கம் 10 ல் 2 ஆவது Column ல் தேதி 06–01–2025 நேரம் 14.59 Reliance Jio Info. Ltd டவர் என்றால் சரிதான். அந்த அழைப்பு Outgoing call என்றால் சரிதான். 80158 04386 என்ற எண்ணிலிருந்து 93619 17028 என்ற எண்ணிற்கு 06–01–2025 நேரம் 14.59 வினாடி 59க்கு Outgoing call சென்றுள்ளது. 93619 17028 என்ற எண் Reliance Jio என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே எண்ணான 93619 17028 ல் இருந்து மாலை 06–01–2025 மதியம் 14:59:59 மணிமுதல் மாலை 6.12 மணிவரை எந்த அழைப்பும் நாங்கள் வழங்கிய தொலைபேசி எண்ணான 80158 04386 க்கு Incoming Call எதுவும் வரவில்லை என்றால் சரிதான். பிற்பகல் 14:59:59 பின்பு எங்களுடைய Subscriber ஆன 80158 04386 என்ற எண்ணில் இருந்த அடுத்த அழைப்பு 06–01–2025 அன்று 18:48:50 வினாடிகளுக்கு செய்யப்பட்டுள்ளது எ'னறால் சரிதான். அதற்கு இடைப்பட்ட நேரத்தில் 14:59:59 மணிமுதல் 18:48:50 வரையிலான இடைப்பட்ட காலத்திற்குள் எந்த Incoming & Outgoing Call இல்லை என்றால் சரிதான். Incoming SMS 2 வந்துள்ளது. SMS வந்த நேரம் 18:22:32, 18:22:34 என்றால் சரிதான். அது Airtel Service Provider ல் இருந்து அனுப்பப்பட்ட SMS என்றால் சரிதான். அதனுடைய தொடர்ச்சியாக 07–01–2025 வரை அந்த 80158 04386 என்ற எண்ணின் செல்போன் எங்களுடைய Tower Location ல் தான் இருந்தது என்றால் சரிதான். 07–01–2025 ல் எங்கள் நிறுவனத்தின் 4 Tower Cell ID காட்டுகிறது. அந்த மூன்றுTower Cell ID எந்தெந்த பகுதியில் உள்ளது என என்னால் குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் CDR ல் Tower ID எண் உள்ளது. குறிப்பிட்ட Tower ID யின் முகவரி குறிப்பிடவில்லை. அதற்கு பதிலாக Latitude, Longitude குறிப்பிடப்பட்டுள்ளது. நான் செக் செய்து தான் கூறமுடியும். நான் குறிப்பிட்டுள்ள மூன்று Tower ID யிலும் 2 Tower ID ல் 07–01–2025 ல் மாறியுள்ளது என்றால் சரிதான்.

**நேரம் 13.45 மணி**

**<u>மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**நேரம் 14.50 மணி**

நான் கொடுத்துள்ள CDRல் 4 Tower ID பயன்படுத்தப்பட்டதாக கூறியுள்ளேன் ஆனால் அந்த CDRல் 2 டவர் எண்கள் 3020 மற்றும் 3100 மட்டுமே பயன்பாட்டிலிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறாகும். 4 டவர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. 404-94-55375-244827413 என்ற ஒரு ID யும் மற்றொன்று 404-94-55375-164850187 மற்றும் 404-94-55375-244201238 மற்றும் 404-94-55375-165110228 மேற்படி 4 ID 07-01-2025 அன்று 80158 04386 என்ற எண்ணிற்கு Connect ஆகியுள்ளது. 06-01-2025ல் Different Tower ID பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றால் சரிதான். அந்த 4 டவர்கள் 4 வெவ்வேறு இடங்கள் என்றால் அதை சரிபார்த்து தான் செல்லமுடியும். CDR ன் பக்கம் 9ல் 06-01-2025 அன்று 80158 04386 என்ற எண்ணிற்கு இறுதியாக அழைப்பு பெறப்பட்ட நேரம் 10:49:19 என்றால் சரிதான். அதன் தொடர்ச்சியாக ஒரு வெளி அழைப்பு 14:59:59 க்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி Incoming Call & Outgoing Callக்கு ஒரே டவர் தான் பயன்பாட்டில் இருந்துள்ளதா என்றால் இல்லை. வெவ்வேறு Cell ID ஆகும். 06-01-2025 தேதி முழுமைக்கும் பயன்படுத்தப்பட்ட Cell ID ல் அதிகமாக அழைப்புகள் பெறப்பட்டதும், செய்யப்பட்டதும் அதிகமான ஒரே டவர் இணைப்பு எது என்றால் 44 ID உள்ளது அதை சரிபார்த்து தான் சொல்லமுடியும். 404-94-55375-244827413 என்ற IDல் 7 கால்கள் பேசும் போது பயன்படுத்தப்பட்டுள்ளது. 404-94-55375-168656396 என்ற IDல் 4 கால்கள் பேசும் போது பயன்படுத்தப்பட்டுள்ளது. எங்களுடைய வாடிக்கையாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ள நபர் அவரே அந்த எண்ணை பயன்படுத்திருக்கிறாரா அல்லது அவரது அனுமதியின்பேரில் வேறு யாரும் பயன்படுத்துகிறார்களா என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் சொல்ல முடியாது. யாரால் வாங்கப்பட்டது என்று மட்டும் தான் சொல்ல முடியும். என்னிடம் காவல் துறையினர் இந்த செல்எண் பயன்பாட்டிற்கான

அலைபேசியை ஒப்படைத்தார்களா என்றால் இல்லை. CDR ல் குறிப்பிடப்பட்டுள்ள IMEI No. ல் அனைத்து அழைப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். 06-01-2025 அன்று முற்பகல் 10.49 மணிக்கு பின்னர் பிற்பகல் 02.59 மணிக்கு இடையில் எந்த அழைப்பும் என்றால் சரிதான். SMS மட்டும் தான் வந்துள்ளது. 14.59 மணிக்கு பிறகு 18.48 மணிவரை எந்த அழைப்பும் இல்லை என்றால் சரிதான். 2 SMS வந்துள்ளது. பொதுவாக ஒரு டவரில் Incoming or Outgoing call Server எவ்வளவு நேரம் Support செய்யும் என்றால் Unlimited ஆக பேசலாம். 06-01-2025 அன்று 18.48 மணிக்கு 1357 வினாடிகள் outgoing call செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த outgoing call நான் குறிப்பிட்டுள்ள Tower ல் எந்த Tower என்றால் 404-94-55375-244827413 என்ற Tower ID ல் Connect ஆகியிருந்தது.

**நேரம் 15.15 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.